# அமர் சேவா சங்கம், ஆய்க்குடி

# தலைவர் அறிக்கை

# 2022-2023

பேரன்புடையீர்.

*நமஸ்காரம்.   வாழ்க வளமுடன், வாழ்க வையகம்!.*

“அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய

செறுவார்க்கும் செய்யா விடல்” –குறள்

உன் லட்சியம் உயர்ந்ததாக இருந்தால் துன்பமும் அதிகமாகவே இருக்கும் - “சுவாமி விவேகானந்தா”

என்ற வாக்கியத்தை மெய்யாகக் கொண்டு எனது தலைவர் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்….

நமது முதல் Patron-in-Chief திருC.சுப்ரமணியம் பாரத ரத்னா விருதாளர் 24-07-1993 அன்று அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்ததோடு செப்டம்பர் மாத Bhavans Journal இதழில் "Human Wonder" என்ற தலைப்பில் சங்கத்தைப் பாராட்டியதை நன்றியுடன் நினைவுகூர்வோமாக. நமது தற்போதைய Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன், நமது Patron திரு.N.வாகுல், ஏப்ரல் 2022-லிருந்து நமது Patron-ஆக செயல்பட ஒப்புதல் வழங்கியுள்ள முன்னாள் CBI இயக்குநர் திரு.D.R.கார்த்திகேயன் I.P.S ஆகியோரது அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும் பயனுள்ளதாகயிருந்து வருகிறது. நமது முன்னாள் Patron (Late) திரு.S.V.மோனி சங்கத்திற்குச் செய்த பல நல்ல பணிகளை நன்றியுடன் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

26.07.2022 அன்று சென்னை BJP அலுவலகமான கமலாலயத்திற்கு அடியேனும், சங்கச் செயலாளர் CA.S.சங்கரராமன் மற்றும் குழுவினரும் சென்று தமிழ்நாடு BJP தலைவர் திரு.K.அண்ணாமலை (Ex.I.P.S.) அவர்களைச் சந்தித்து சங்கத்திற்கு அழைப்பு விடுத்தோம். நமது அழைப்பை ஏற்று 24-03-2023 அன்று வருகைப் புரிந்து நமது நுழைவு வாயில் அருகில் புதியதாக அமையவுள்ள செக்யூரிட்டி ரூம், Reception, our Product sales counter, Tea stall, Exhibition hall, Visual audio room, போன்ற கட்டடங்களுக்கான அடிக்கல்நாட்டு விழாவில், அவரும் தென்காசி திரு.K.A.ராஜேஷ் ராஜா மற்றும் அன்பர்களும் கலந்துகொண்டனர்.

Residential Program for Special Needs Children (RPSNC) கட்டட திறப்புவிழா 15-10-2022 அன்று நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராக அமர் சேவா சங்கத்தின் Patron பத்மஸ்ரீ விருதாளர் D.R.கார்த்திகேயன் IPS (Rtd.) அவர்கள் கலந்துகொண்டார். திரு.K.முரளி, மண்டல மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிட், மதுரை, திரு.S.A.சொர்ணமணி, இயக்குநர், eNTrust Software கம்பெனி, சென்னை, சிறப்பு விருந்தினர்களாக சக்தி மசாலா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் Dr.P.C..துரைசாமி, இயக்குநர் திருமதி.சாந்தி துரைசாமி மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.K.N.ஜெயபிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

சிவசரஸ்வதி வித்யாலயா தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் கழிப்பறைகள் மற்றும் பாதை திறப்பு விழா 02-06-2023 அன்று நமது வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராக இலத்தூர், பிரைமரி ஹெல்த் சென்டர், கூடுதல் மருத்துவ அலுவலர் Dr..N.தமிழ்செல்வி கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக திரு.S.ராமமூர்த்தி, HR-Head, Sheshasayee Paper and Boards Ltd., திருநெல்வேலி, திரு.K.முரளி, துணை பொது மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிட், மதுரை, திரு.N.S.சரவணன், மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிட், தென்காசி ஆகியோர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

சங்க வளாகத்தில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வு மற்றும் மழைநீர் சேகரிப்பை கருத்தில்கொண்டு தடுப்பு அணை Rs.32 lakhs செலவில் New Space India Ltd (NSIL), பெங்களூர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்டு 12-06-2023 அன்று திறப்புவிழாவும் நடைபெற்றது. தலைமை விருந்தினராக New Space India Ltd (NSIL) கம்பெனியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ராதாகிருஷ்ணன் துரைராஜ் மற்றும் அவரது துணைவியார் கலந்துகொண்டு திறந்துவைத்தார்கள். வருகிற ஆண்டுகளிலும் New Space India Ltd அமர் சேவா சங்கத்திற்கு உதவிக் கரம் நீட்ட தயாராகயிருப்பதாக உறுதியளித்தது நமக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருகிறது. சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மேற்பார்வை பொறியாளர், TTK வட்டம், திரு.K.கோபால், நிர்வாக பொறியாளர், சிற்றாறு படுகை

பிரிவு, தென்காசி திரு.T.அண்ணாதுரை மற்றும் உதவிப் செயற்பொறியாளர், குடியிருப்பு திரு.S.ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

நமது அழைப்பை ஏற்று 09-02-2023 அன்று மாண்புமிகு அறநிலைத்துறை அமைச்சர் திரு.P.K.சேகர்பாபு அவர்கள் திமுக மாவட்ட செயலாளர் திரு. சிவபத்மநாபன் மற்றும் அன்பர்களுடன் வருதைதந்து நமது EI Parents விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மேலும் நமது ராஜபாளையம் பிளாக்கில் உள்ள சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நமது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.D.ரவிசந்திரன் IAS அவர்கள் முதல்முறையாக சங்கத்திற்கு விஜயம் செய்து கலந்துகொண்டார்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும், அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் 10-2-2023 அன்று எளிய முறையில் நடைபெற்றது.

காந்தி ஜெயந்தியையொட்டி 01-10-2022 அன்று காலை 6.00 மணியிலிருந்து 02-10-2022 காலை 8.00 மணி வரை அகண்டநாமம் பூஜை சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் SPKC Alumni Association Meeting-யும் MTU Training Hall-ல் வைத்து சிறப்பாக நடைபெற்றது.

உலக மாற்றுத்திறனாளர் தினம் 27-12-2022 அன்று தென்காசி ஐ.சி.ஈஸ்வரன் பிள்ளை பள்ளி வளாகத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திரு.R.கிருஷ்ணராஜ், IPS காலை 10.00 மணியளவில் மதுரை-தென்காசி சாலையில் சக்தி நகர் அருகே உள்ள Ishana Honda Showroom வளாகத்திலிருந்து பேரணியினை வாழத்துரை வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், திரு. K.கபீர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், திரு.K.N.ஜெயபிரகாஷ், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திருமதி. K. வினு, தலைமை ஆசிரியர், ஐ.சி. ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திரு. செந்தூர் பாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் சிறப்பு விருந்தினராக திமுக, தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர், திரு. சிவபத்மநாபன், தென்காசி மாவட்ட அவைத் தலைவர் திரு. சுந்தர மகாலிங்கம் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள். மேலும் இந்நிகழ்ச்சிக்கு திரு.சுந்தர மகாலிங்கம் அவர்கள் மதிய உணவு 1000 நபர்களுக்கு Sponsor வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

சங்கமம் சிறப்புப் பள்ளியின் 25-வது ஆண்டு விழா 07-04-2023 அன்று கொண்டாடப்பட்டது. தலைமைவிருந்தினராக தென்காசி மாவட்ட ஆட்சியர் திரு.D.ரவிசந்திரன் IAS கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக திருமதி.கௌரி சொக்கலிங்கம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், சென்னை வித்யாசாகர் Dr.V.ஸ்மிதா ருக்மணி, மனநல மருத்துவ உளவியல் துறை, சென்னை, திருமதி.சிந்து விஜயகுமார், Janey College of Allied Health, எர்ணாகுளம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட மாற்றுத்திறனாளி மறுவாழ்வு அலுவலர் திரு.K.N.ஜெயபிரகாஷ் இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கினார்.

சிவசரஸ்வதி வித்யாலயா பள்ளியின் ஆண்டு விழா 10-3-2023 அன்று கொண்டாடப்பட்டது. தலைமை விருந்தினராக திரு.தினேஷ் கிருஷ்ணா MD, Director of Strategy, COE, கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக திரு.ஆனந்தன் அய்யாசாமி, சமூக சேவகர், விஸ்வநாதபேரி அவர்களும் திருமதி.ஜமினா ஜின்னா, நிறுவனர், பசியில்லா தமிழகம், தென்காசி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

10-3-2023 அன்று COE Project கீழ் செயல்பட்டு வரும் Business Development-யின் SOP Launch செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 01-09-2023 அன்று Technology, Training and Support ஆகியவற்றின் SOP Launch செய்யப்பட்டது. திரு.ரமேஷ் சாம்பமூர்த்தி அவர்கள் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு இவற்றை launch செய்தார். மேலும் இந்த SOP-க்காக பணியாற்றிய பணிபுரியும் அன்பர்கள் கௌரவப்படுத்தப்பட்டார்கள்.

பணியாளர்களின் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக 08-07-2023 அன்று கொண்டாடப்பட்டது திரு.N.சிவசைலம், IAS (Retd) துவக்கவுரை ஆற்றினார். தலைமை விருந்தினர்களாக திரு.P.செல்லப்பா, தேசீய பால் வள வாரியம் (ஓய்வு), தென்காசி, சிறப்பு விருந்தினராக திரு.P.வினோத்பால், மண்டல தலைமை, ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட், மதுரை மற்றும் ஸ்ரீமதி.S.கவிதா, கிளை மேலாளர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் காப்பீட்டு நிறுவனம் (ESIC), தென்காசி ஆகியோர் கலந்துகொண்டனர். பணியாளர்களின் மத்தியில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பணியாளர்கள், குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

1, 2 & 3 செப்டம்பர் 2023 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வாராஹி ஹோமம், சென்னை வாராஹி மந்திர பீடம் அறக்கட்டளை மற்றும் அமர் சேவா சங்கம் இணைந்து நடத்தும் சதசண்டி மஹா யாகம் வழக்கம்போல் பக்தி பரவசத்துடன் நடைபெற்றது. நமது CFO திரு.S.ராஜேஷ்வரன் வைதீக காரியங்களில் குருஜி ஸ்ரீவாராஹி மைந்தன் அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டார். மற்ற பணிகளை செயலாளர் திரு.S.சங்கரராமன், சங்க உறுப்பினர்கள் மற்றும் பணிபுரியும் அன்பர்கள் துணையோடு குழுக்கள் அமைத்து சிறப்பாக நடத்தி முடித்தார். அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வோமாக!

மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இந்த வருடம் Spinal Cord Injured Persons Get-together செப்டம்பர் 9, 10, 11 தேதிகளில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. தென்காசி மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு.E.D.சாம்சன் IPS அவர்கள் செப்டம்பர் 9, 2023 காலை 10.30 மணியளவில் மதுரை-தென்காசி சாலையில் சக்தி நகர் அருகே உள்ள Ishana Honda Showroom வளாகத்திலிருந்து பேரணியினை வாழத்துரை வழங்கி கொடியசைத்துத் துவக்கி வைத்தார். தென்காசி மாவட்ட துணை கண்காணிப்பாளர் திரு.நாகசங்கர் மற்றும் தென்காசி சரக காவல் ஆய்வாளர் திரு..பாலமுருகன் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார்கள்.

புதிய பேருந்து நிலையம் நுழைவுவாயில் அருகே பேரணி ஆட்ட, பாட்டங்களுடன் நிறைவுசெய்யப்பட்டது. அன்று மாலையில் நடைபெற்ற நிகழ்வில் அமெரிக்கா Neuro Physician Dr.ராம N.நாராயணன் அவர்களும் ஆஸ்திரேலியா Dr.சுமிதா கவுண்டன், தென்காசி Oncologist Dr.M.மணிகண்டன் ஆகியோர் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்ட அன்பர்களுக்கு சிறப்பான அறிவுரைகளை வழங்கினார்கள்.

அன்று காலையிலும், மாலையிலும் Dr.சுமிதா கவுண்டன் அவர்களின் Bladder and Bowel Management குறித்து PowerPoint Presentation மிகச் சிறப்பாக நடந்தது. 9, 10 தேதிகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளிலும், விளையாட்டுப் போட்டிகளில் பலரும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றுப் பரிசுகளைப் பெற்றனர்.

மதுரை Dr.S.அறம், திருநெல்வேலி Dr.S.செந்தில்பாபு, Dr.M.சடகோபன், ஆஸ்திரேலியா Dr.சுமிதா கவுண்டன், தென்காசி Dr.R.கணேசன், Dr.K.சங்கரகுமார், Dr.S.மது, Dr.D.கார்த்திக் துரைசாமி, Dr.M.ராஜகுமாரி, Dr.P.இந்துமதி, Dr.S.வேதமூர்த்தி போன்றோர் பங்கேற்ற மருத்துவ முகாம் நடைபெற்றது.. தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகளை வீட்டில் எப்படி பராமரித்துக்கொள்வது மற்றும் தொழிற்பயிற்சி நடத்துவது சம்பந்தமான மருத்துவ அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு மருத்துவர்கள் வழங்கினார்கள்.

நமது சங்கத்தில் மறுவாழ்வுப் பெற்ற SCI அன்பர்கள் மட்டுமல்லாமல் கோவை, சேலம், வேலூர், விருதுநகர், மதுரை, காரைக்குடி, நாகர்கோவில், தூத்துக்குடி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, திருவள்ளுர், சென்னை போன்ற மாவட்டங்களிலிருந்து SIPA அமைப்பைச் சேர்ந்த அன்பர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றது சங்கத்திற்கும், பங்கேற்றவர்களுக்கும் புத்துணர்வையும் ஏற்படுத்துகிறது. இந்நிகழ்வினை மிகச் சிறப்பாக திட்டமிட்டு ஏற்பாடு செய்த சங்கப்பணியாளர்கள் பாராட்டப்பட்டனர்.

கோவை சகாய் மறுவாழ்வு சென்டர் Chief Physiotherapist திரு.T.கஜேந்திரன் அவர்கள் Para Olympics Sports குறித்து உரைநிகழ்த்தியதையடுத்து Amar Para Olympics Sports Academy தொடங்கப்படுவதாக செயலாளர் திரு.S.சங்கரராமன் அறிக்கை வெளியிட்டார்.

நிறைவு நாளன்று நமது மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.K.N.ஜெயபிரகாஷ், SIPA, தலைவர் திரு.A.கருணாகரன், செயலாளர் திரு.K.சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

Exhibition-ல் பங்கேற்ற Assistive Device (Ostrich, Neomotion, Dextreo, ASSA EI app) – அன்பர்கள் அவர்களின் தயாரிப்புகள் குறித்து விரிவாக விளக்கியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியதோடு பயனுள்ளதாக அமைந்தது. மதியம் 2.00 மணியளவில் அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவித்து எல்லோருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய பிரார்த்தனைச் செய்து விழா நிறைவு செய்யப்பட்டது.

நமது கமிட்டி உறுப்பினர் திரு.S.அன்பு ரமேஷ்-சித்ரா தம்பதியரின் இளைய மகள், செல்வி.ஸ்ருதி & செல்வன் திரு.சித்தார்த் அவர்களின் திருமண வைபவம் 01-01-2023 அன்று நமது REC Hall-ல் வைத்து சிறப்பாக நடைபெற்றது. சுவிட்சர்லாந்து, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரா போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் உறவினர்களும், நண்பர்களும் பங்கேற்றதும் அவர்கள் வழங்கிய பரிசுத்தொகை Rs.9.lakhs அனைத்தையும் சங்கத்திற்கு திரு.S.அன்பு ரமேஷ் குடும்பத்தார் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

ISO Internal and External Audit நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் 29-05-2023 அன்று BSI External Audit நடத்தப்பட்டது. 2025 வரை Certificate Renewal கொடுக்கப்பட்டுள்ளது.

பணியாளர்களுக்கு அவர்களுடைய திறன்களில் மேன்மையடைய அவ்வப்பொழுது பயிற்சிகள் சங்க வளாகத்திலும், வெளி இடங்களிலும் அளிக்கப்பட்டு வருகிறது.

APPI, GCC, Oracle, Omcharity, HCI, SCB, Kone, Gurukrupa, KVR, Voltas போன்ற நிறுவனங்கள் திருவாளர்கள் கல்ராமன், R.P.கிருஷ்சமாசாரி போன்ற தனிநபர்கள் நமது Project-களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதால் நமது செயல்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னை (08-01-2023), பெங்களூர் (21-05-2023) மற்றும் தென்காசி (09-07-2023) ஆகிய இடங்களில் நடைபெற்ற மாராத்தான் நிழ்ச்சியில் இந்த வருடமும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இந்த வருடம் 15-1-2023 அன்று மும்பை மாராத்தான் நிகழ்ச்சியில் செயலர் அவர்கள் குழுவினருடன் அடியேனும், நமது பொதுக்குழு உறுப்பினர் திரு.A.S.நாராயணன் அவர்களும், மும்பை திருமதி.புவனேஷ்வரி குழுவினர் திரு.சுந்தர் ஐயர் குழுவினர் மற்றும் மும்பை வாழ் சங்கத்தின் நலம் விரும்பிகள் சிலரும் கலந்துகொண்டு Rs.33 lakhs நிதிதிரட்டியுள்ளோம்.

மாநில மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலர், இயக்குநர் மற்றும் பிற அதிகாரிகள் தென்காசி மாவட்ட ஆட்சிதலைவருடன் 26-04-2023 அன்று சங்கத்திற்கு Rights project Technolgy model-ஐ ஆய்வு செய்வதற்காக வருகைபுரிந்தனர். மேலும் கிராமம் சார்ந்த களப்பணியாளர்களின் பணிகளை கேட்டறிந்தனர். நமது EI application Presentation-யும் பொறுமையாக பார்வையிட்டு பாராட்டினார்கள்.

13-4-2023 அன்று சென்னை ராஜ்பவனில் நடைபெற்ற கூட்டத்திற்கு சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இதில் VL அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் அங்கீகாரம் மாண்புமிகு தமிழக ஆளுநர் மேதகு.திரு.R.N.ரவி அவர்களின் பொற்கரங்களால் செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

20-5-2023 அன்று திருவனந்தபுரத்தில் வைத்து நடைபெற்ற C20 மாநாட்டில் அடியேனும், Ms.V.நவமணியும் கலந்துகொண்டு நமது EI App குறித்து Presentation செய்யப்பட்டது.

சங்க வளாகத்தில் CA.T.A.P.வரதகுட்டி, முனைவர் திரு.அ.சிதம்பரம், முனைவர் திரு.பொன் கதிரேசன் ஆகியோர் தலைமையில் மாற்றுத்திறனாளர் பேரவையின் கருத்தரங்கம் இரண்டு நாட்கள் (11-02-2023 மற்றும் 12-02-2023) நடைபெற்றது. இதில் மாற்றுத்திறனாளி அமைப்பின் நிர்வாகிகள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். இதனை தொடர்ந்து சர்வதேச கருத்தரங்கு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் வைத்து May 1, 2, 2023 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டில செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்கள் கலந்துகொண்டார். இப்பேரவையின் Zoom meeting வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்று வருகின்றது. இந்த Zoom Meeting அமர் சேவா சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

02-03-2023 அன்று கர்நாடகா மாநிலம் கதக் மாவட்டம் Panchayatraj and Rural Development University ஏற்பாடு செய்திருந்த ஸ்வராஜ் என்ற தலைப்பின் சர்வதேச மாநாட்டில் நமது தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் பத்மஸ்ரீ விருது பெற்றததற்காக கௌரவிக்கப்பட்டார். செயலாளர் திரு.S.சங்கரராமன் அவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

ரூவண்டாவில் நடைபெற்ற கனடாவின் கிராண்ட் சேலஞ்சஸ், சேவிங் ப்ரைன்ஸ் ஏற்பாடு செய்திருந்த மூன்று நாட்கள் Workshop-ல் நமது செயலாளர் திரு.S.சங்கரராமன், திருமதி.ரமணி சங்கரராமன், நமது கமிட்டி உறுப்பினர் திரு.எஸ்.அன்புரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு EI App மற்றும் தமிழக அரசு மாற்றுத்திறனாளி நலவாழ்வுத்துறை செயல்பாடுகளின் பெருமையைச் பறைசாற்றும் வாய்ப்பு கிட்டியது.

மாற்றுத்திறனாளிகளை அரவணைத்து கொண்டாடும் இந்தியாவின் முதல் திருவிழாவான கோவாவில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த Purple Fest: "Celebrating Diversity," என்ற நிகழ்ச்சியில் ஜனவரி 6,7 மற்றும் 8th 2023 ஆகிய தேதிகளில் செயலர் திரு.எஸ்.சங்கரராமன் மற்றும் சங்கத்தில் பணிபுரிகின்ற 12 அன்பர்கள் உள்பட அடியேனும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இந்தியாவில் பல்வேறு மாநிலத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றத்திற்காக மேற்க்கொண்டுவரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து செயலாளர் திரு.S.சங்கரராமன் எடுத்துரைத்ததை நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் வியந்து பாராட்டினர்.

மத்திய அரசின் Social Justice and Empowerment செயலாளர் திரு.அகர்வால் IAS மகாராஷ்டிர மாநில மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான ஆணையர் போன்றோரை சந்தித்து நமது Enabling Inclusion குறித்து தெளிவான விவாதத்தை மேற்க்கொள்ள முடிந்தது. நாமும் செயலரும் நமது குழுவினருடன் மகாராஷ்டிர மாநில ஆணையர் மற்றும் குழுவினரை மீண்டும் சந்தித்து உரையாடியது குறிப்பிடத்தக்கது. மற்றும் சமீபத்தில் 21-9-2023 அன்று டெல்லியில் நடைப்பெற்ற Closed meeting-ல் திரு.ராகேஷ் அகர்வால் IAS Secretary, Social Justice and Empowerment மற்றும் அதிகாரிகளையும் EI app தொடர்பாக சென்னை முட்டுக்காடு NIPMED நிறுவன அதிகாரிகளையும் நமது குழுவினருடன் சென்று சந்தித்ததையும் நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.

கோவா நிகழ்ச்சியின் போது அவர்கள் ஏற்பாடு செய்திருந்த Innovative Invention-களை வெளிக்கொனரும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்ட Stall-கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றது. அதே போல் Motorized boat-யில் எங்களை கடற்கரை அருகே கடலுக்குள் ஓரிரு சுற்றுகள் வளம் வரச்செய்தது மன மகிழ்ச்சியைத் தந்தது. முதலமைச்சர், சமூக நலத்துறை அமைச்சர் போன்ற அமைச்சர் பெருமக்களும், அரசு அதிகாரிகளும் பங்கேற்ற மூன்று நாட்கள் நடைபெற்ற Purple Festival நிகழ்ச்சியில் பல தொண்டு நிறுவனங்களும் கலந்துகொண்டது, ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி கொள்ள வாய்ப்பாக அமைந்தது. பல்வேறு நவீன செய்திகளையும் சேகரித்து கொள்ள முடிந்தது. இதுபோன்ற நிகழ்ச்சி தமிழ்நாட்டிலும் நடைபெற வேண்டும் என்ற சிந்தனையை தமிழக அரசு ஏற்பாடு செய்தால் நலம் பயக்கும் என்ற நல்லெண்ண அடிப்படையில் சென்னை வித்யாசாகரைச் சேர்ந்த சகோதரி Ms.Smitha அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். இக்கருத்தரங்கு அடுத்த ஆண்டு Jan- 2024, 2-வது வாரம் கோவாவில் வைத்து International Seminar-ஆக நடைபெறவுள்ளது என்ற அறிவிப்பு நமக்கு வந்துள்ளது.

- **விருதுகள்**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே சிறந்த Assistive Technology Initiative விருது வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் வேலைக்கு அமர்த்துவதற்கான சிறந்த நிறுவனத்திற்கான விருதினை தமிழக முதலைமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 03-12-2022 அன்று வழங்கப்பட்டது. இவ்விருதினை செயலர் திரு.எஸ.சங்கரராமன் பெற்று வந்தார்.

பீடியாட்ரிக் அசிஸ்டிவ் டெக்னாலஜி (AT) வழங்கல் திட்டதிற்கான ஜீரோ ப்ராஜெக்ட் 2023 என்ற விருது சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தினத்தையொட்டி 23-02-2023 அன்று ஆஸ்திரியாவின் வியன்னாவில் ஜீரோ பராஜெக்ட் கான்பரன்ஸில் வைத்து கொடுக்கப்படடது. இவ்விருதினை அசிஸ்டிவ் டெக்னாலஜி இயக்குநர் திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி மற்றும் Ms.மேரிபிரேம் அமர் சேவா சங்கத்தின் சார்பாக பெற்றுவந்தனர்.

கேவின் கரே சிறப்பு அங்கீகார விருது 25-02-2023 அன்று சென்னையில் வைத்து வழங்கப்பட்டது. இவ்விருதினை செயலர் திரு.எஸ.சங்கரராமன் பெற்று வந்தார்.

கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28-04-2023 அன்று Icon of Excellence - Krish Awards 2023 வழங்கப்பட்டது.

**இரங்கல் செய்தி**

மதுரை Penguin Apparels கம்பெனியின ஸ்தாபகர் திரு.K.S.S.A மாரியப்பன் 19-09-2022 அன்றும், TVS குழுமம் திரு.வேணு, திரு.கோபால் இவர்களின் தாயார் திருமதி.பிரேமா சீனிவாசன் 26-09-2022 அன்றும், ஆழ்வார்குறிச்சி, ஸ்ரீபரமகல்யாணி கல்வி குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திரு.N.சிவசைலம் 22-12-2022 அன்றும், மகாகவி சுப்பிரமணி பாரதியின் மூத்த மகள் தங்கம்மாவின் மகளான திருமதி.லலிதா பாரதி அவர்கள் 27-12-2022 அன்றும், சென்னை திரு.ஹரிஹரன் 01-02-2023 அன்றும், நமது முன்னாள் ஹோம் மாணவன் அச்சன்புதூரைச் சேர்ந்த செல்வன் அனுஷ் 12-02-2023 அன்றும் சங்கத்தின் நலம்விரும்பியும், நமது முன்னாள் துணை தலைவருமான சென்னை திரு.M.R.ஸ்ரீனிவாசன் 24-03-2023 அன்றும், சுரண்டை பொன்ரா மருத்துவமனை Dr.ஜெயலெஷ்மி 08-04-2023 அன்றும், ஐந்தருவி, சங்கராஸ்ரமம் Managing Trustee மற்றும் தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் செயலருமான திரு.சிவராமகிருஷ்ணன் ஐயா 09-06-2023 அன்றும், ஐந்தருவி சங்கராஸ்ரமத்தின் திரு.துரைசாமி ஐயாவின் துணைவியாரும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் திரு.R.D.துளசிராஜ், Dr.R.D.ரவீந்திரன், திரு.R.D.ஸ்ரீராம், திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை திருமதி.சாரதா ராமகிருஷ்ணன் ஆகியோரின் தாயாருமான திருமதி செல்லம்மாள் 12-07-2023 அன்றும், சென்னை Besant Nagar திரு.வேத நாராயணன் IAS (Retd) அவர்களின் துணைவியார் திருமதி.விஜயலெஷ்மி, ஆய்க்குடி திருமதி.லெஷ்மி ராமகிருஷ்ணன் அவர்களின் தாயார் திருமதி.ஜானகி லெஷ்மணன் 06-08-2023 அன்றும், இமாச்சல பிரதேசத்தில் 14-8-2023 அன்று ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்த அன்பர்களுக்கும், நமது Water Consultant மற்றும் நலம்விரும்பியுமான சென்னை Dr.V.R.விஸ்வேஸ்வரன் 20-8-2023 அன்றும், சாது சங்க அன்பர்கள் பலரால் ஸ்ரீஸ்ரீஸ்ரீ அண்ணா என்றும் ஸ்ரீகிருஷ்ணப்ரேமி மஹாராஜ் என்றும் பக்தி உணர்வோடு அழைக்கப்பட்டு வந்த ஸ்ரீராமகிருஷ்ணன் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் வைத்து தனது 89-வயது நிறைவடைந்த நிலையில் 31-08-2023 அன்றும், தீவிரவாதிகளின் தாக்குதலின்பேரில் காஷ்மீர் நகரில் வீரமரணம் அடைந்த நமது ராணுவ மற்றும் காவல்துறை அதிகாரிகள் இறைவனது திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சர்வதேச தலைவர்கள் பலரும் கலந்துகொண்ட G20 மாநாட்டை வெற்றிக்கரமாக நடத்திமுடித்த நமது இந்திய அரசுக்கு பாராட்டுத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது இணையதளத்தைப் (website) பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலர், CSR Cell, மக்கள் தொடர்புப் பிரிவு மற்றும் The Amar Foundation, நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

ஆய்க்குடியின் பிரதான தெய்வமான ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி மற்றும் பல்வேறு மதத்தவர் வழிபடும் தெய்வங்களின் அனுக்கிரஹத்தாலும், பல குருமார்களின் கிருபையாலும், பல நல்லிதயங்கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், பல அரசியல் பிரமுகர்களின் வருகையாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிதி நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் வழங்கும் நன்கொடையாலும், நன்கொடை திரட்டி உதவும் மற்றும் நாம் ஆங்காங்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்பொழுது உணவு, உறைவிடம், வாகன வசதிகளை செய்து தரும் நலம்விரும்பிகளின் கருணையாலும், மத்திய-மாநில அரசின் பல்வேறு துறைகள், குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான நல்வாழ்வுத் துறை, ரோட்டரி, லயன்ஸ், ஜேசிஸ், மெசானிக், வாழும் கலை, மனவளக் கலை, நம்மைப் போன்ற பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நிலம் வாங்குவதற்கு உதவுவோர், மற்றும் பல்வேறு ஊடகங்களின் தொடர் ஒத்துழைப்பினாலும், பொதுக்குழு, செயற்குழு, நிதிஆய்வுக் குழு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான அறிவுரைக்குழு உறுப்பினர்கள், நமது முன்னாள் இன்னாள் Patron-in-Chief, Patrons, வழிகாட்டுதலாலும், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் பணிபுரியும் அன்பர்களின் இடைவிடாத உழைப்பினாலும், மாற்றுத்திறனாளர் சகோதர, சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் நமது சேவையினை விழிப்புணர்வோடு தமது வாழ்க்கைதரம் மேம்படும் வண்ணம் நன்கு பயன்படுத்தி வருவதாலும் நிர்வாகம் சார்ந்த மறுவாழ்வுப்பணி (Institution Based Rehabilitation) மற்றும் கிராமம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகள் (Village Based Rehabilitation) செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

ஆரம்பகாலத்தில் அமர் சேவா சங்கம் உருவாவதற்கு உறுதுணையாயிருந்த அடியேனது பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்கள், மற்றும் உள்ளூர் அன்பர்கள், எனது துணைவியார், ஆய்க்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி (SPKC), கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி (GCT) ஆசிரியப் பெருமக்கள் மற்றும் நண்பர்களின் ஆதரவும் பின்னர் சங்கத்தின் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்ட CA.S.சங்கரராமன் மற்றும் அவர்தம் குடும்பத்தார், நண்பர்கள் நல்கி வரும் ஆதரவும், Care Giving பணிகளை இன்முகதோடு மனமுவந்து மேற்கொண்டு வரும் அன்பர்களின் ஆதரவும் குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான நமது God Mother சிவசங்கரி அம்மா, "உச்சி மீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே" என்ற தலைப்பில் எழுதிய ஐந்து பக்க கவர் ஸ்டோரி 1985 ஜனவரி 27-ஆம் தேதி ஆனந்த விகடன் வார இதழில் வெளியானதும், அதைத் தொடர்ந்து பல ஊடகங்கள் சங்கம் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருவதும், மத்திய-மாநில அரசுகள் மற்றும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகள் நமது தொண்டினைப் பாராட்டி விருதுகள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சாராரின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் என்பதை பணிவோடு சமர்பிக்கின்றோம். "தனிமரம் தோப்பாகாது".

நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் துணைநிற்பாராக!!

எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று வளமோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!.

நன்றி.

என்றும் இறைபணியில்,

இடம்: ஆய்க்குடி
நாள்: 28-9-2023

S.ராமகிருஷ்ணன்,
தலைவர்.